1973 டிசம்பர் 1]

*544 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில், வடகோவையையும் காந்திபுரத்தையும் இணைக்கும் வகையில் இரயில் பாதையின் குறுக்கே கட்டப்படவிருக்கும் மேம்பாலத் திட்டக் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) & (இ) இச்செயற் குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனைக்காக, விரிவான செயற் குறிப்புகளை அனுப்புமாறு நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவை எதிர்பார்க்கப்படுகின்றன.

வாகைகுளத்தில் விமான நிலையம்

*545 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. என். கே. பழனிசாமி : } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தாலுக்காவில் வாகைகுளம் கிராமத்தில் விமான நிலையம் அமைத்திடும் திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி மத்திய அரசினை, மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தூத்துக்குடிக்கு அருகே விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அவசியத்தைப்பற்றி இந்திய அரசிடம் இவ்வரசு பன்முறை வற்புறுத்திக் கூறி வந்துள்ளது. தூத்துக்குடிக்கு விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது நிதி நிலையைப் பொறுத்ததாகும் என்று இந்திய அரசு நமக்குத் தெரிவித்துள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் விமான நிலையங்கள் ஏனைய வட மாநிலங்களில் இருப்பதைவிட மிகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் தூத்துக் குடி விமான நிலையத்தினை ஏற்படுத்த மேலும் துரிதப்படுத்தி விரைவில் அது அமைக்கப்பட அரசு ஆவன செய்யுமா?